**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**...**
**IN THE COURT OF Judicial Magistrate Court, Shencottai**
**CC No. 13/2018**

Deposition of the witness for Prosecution **PW3**
Name : **கற்பகமூர்த்தி**
Father's/Husband's Name :
Age :
Village and Taluk :
Caste and Religion :
Calling :
Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on (02.06..2026)

Accused present

முதல் விசாரணை

நான் தற்போது அச்சம்புதூர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வந்தேன். நான் குற்றாலம் காவல் நிலையத்தில் 2017 ம் வருடம் முதல் நிலை காவலராக பணியில் இருந்த போது 13.06.2017 ம்தேதி 16.00 மணிக்கு குற்றாலம் காவல் நிலைய குற்ற பிரிவு ஆய்வாளருடன் நானும், மற்றும் சிறப்பு உதவி ஆய்வாளர்கள் சரசையன், முத்துநாயகம், ஜோசப், மற்றும் காவலர் பென்ஜாம் ஆகியோர்கள் மத்தளம்பாறை விலக்கு பக்கம் குற்றம் எதுவும் நடைபெறாமல் இருக்கக ரோந்து செய்து வரும் போது சம்பவ இடத்தில் TN 72 AB 2821 என்ற பதிவெண் கொண்ட இண்டியா கார் ரோட்டின் ஓரமாக நின்று கொண்டிருந்தது. அந்த இடத்தில் சந்தேகத்திற்கு இடமான மேலகரம் அம்பேத்கர் தெருவை சாாந்த கந்தசாமி மகன் செல்வகுமார் உதவி ஆய்வாளரின் சீருடையில் நின்ற நபர் அந்த வழியாக வந்த வாகனங்களை வாகன தணி'க்கை செய்து கொண்டிருந்தவர் போலிஸ் பார்ட்டியான எங்களை கண்டதும் அங்கிருந்து தப்பி ஓட முயற்சித்தார். அப்போது அவர் கால் தவறி கீழே விழுந்தார். அவரை பிடித்து விசாரித்த போது பின்னர் பெயர் விலாசம் கேட்டு தெரிந்து கந்த சாமி மகன் செல்வக்குமார் என்பவர் உதவி ஆய்வாளர் போல் சீருடை அணிந்து உதவி ஆய்வாளர் போல் பசாங்கு செய்து காவல் துறையையும், பொது மக்களையும் ஏமாற்றிய நபர் என்று தெரியவந்ததால் அவர் பயன்படுத்திய இண்டியா காரையும் சம்பவ இடத்தில் வைத்து காவல் அதிகாரிகள் அத்தாட்சி பிறப்பித்து

கைப்பற்றினார்கள். பின்னர் எதிரியையும் வாகனத்தையும் கைப்பற்றி குற்றாலம் காவல் நிலையத்திற்கு அன்றையதினம் 17.30 மணிக்கு கொண்டு வந்து வழக்கு பதிவு செய்ய உதவியாக இருந்தேன். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

__எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை__

நான் தற்போது சாட்சியம் அளித்தது தான் எனது காவல் ஆய்வாளர் விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரிதான். ரோந்து பணிக்கு காவல் ஆய்வாளருடன் வாகனத்தில் சென்றேனா இல்லை எனது தனிப்பட்ட வாகனத்தில் சென்றேனா என்றால் காவல் ஆய்வாளர் உடன் சென்றேன். பொதுவாக எங்களுக்கு ஒதுக்கப்படும் பணியானது பொது நாட்குறிப்பேட்டில் பதிவு செய்யப்படும் என்றால் சரிதான். இந்த வழக்கில் பொது நாட் குறிப்பேட்டினை காவல் ஆய்வாளர் விசாரணைக்காக வாங்கிக் கொண்டாரா என்றால் எனக்கு தெரியாது. நான் முதல் விசாரணையில் அன்று 16 மணிக்கு ரோந்து சென்றதாக சாட்சி அளித்துள்ளேன். யாராவது 16.30 மணிக்கு ரோந்து பணிக்கு சென்றதாக சாட்சி அளித்திருந்தால் அது தவறு என்றால் சரிதான். இந்த வழக்கில் புகார்தாரர் எனது உயர் அதிகாரியான காவல் ஆய்வாளர் என்றால் சரிதான். காவல் ஆய்வாளர் தான் இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து உள்ளார் என்றால் சரிதான். நான் காவல் ஆய்வாளர் விசாரணையில் வழக்கு பதிவு செய்ய உதவியாக இருந்ததாக கூறி இருப்பதால் இந்த வழக்கில் புலன் விசாரணை அதிகாரி யார் என்றால் காவல் ஆய்வாளர் . சம்பவ இடத்தில் எதிரிவாகன தணிக்கை செய்து கொண்டிருந்ததாக சொல்லி உள்ளது எந்த வாகனம் என்று வாகன எண் தெரியுமா என்றால் தெரியாது. எதிரி காவல் சீருடை அணிந்து பொதுமக்களை மோசடி செய்வதாக தனிப்பட்ட புகார் எதுவும் பொதுமக்கள் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் அத்தாட்சியில் கைப்பற்றும் பொழுது உடன் இருந்தேன். அப்போது மணி என்ன இருக்கும் என்றால் ஞாபகம் இல்லை. அத்தாட்சியில் சொத்தினை கைப்பற்றும்பொழுது பொதுவாக உடன் இருக்கிற காவலர்களும் அதிகாரிகளோ கையொப்பம் செய்வது வழக்கம் என்றால் சரிதான். அதேபோல் அத்தாட்சியில் தனிப்பட்ட நபரும் கையொப்பம் செய்ய வேண்டும் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். இந்த வழக்கில் அத்தாட்சியில் சொத்தினை கைப்பற்றும்பொழுது தனிப்பட்ட நபர்கள் யாரும் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் வழக்கு சொத்துக்களை அத்தாட்சியில் கைப்பற்றும் பொழுது

அதில் எனது கையொப்பம் இல்லை என்றால் சரிதான். புலன்விசார் அதிகாரி என்னை விசாரிக்கும் பொழுது அத்தாட்சியில் கையொப்பம் செய்திருந்தேன் என்று சொன்னால் அது தவறு என்றால் சரிதான். சம்பவம் நடந்த தேதியான. 13 6 .2017 ஆம் தேதி என்பது குற்றாலத்தில் சீசன் டைம் என்றால் சரிதான். பொதுவாக மாலை நேரங்களில் சீசன் நேரத்தில் வாகன போக்குவரத்து அதிகமாக இருக்கும் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லக் கூடிய நாளில் நடந்த நேரம் மாலை 4 மணி என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படக்கூடிய இடமானது ஒரு பரபரப்பான இடம் ஆட்கள் நடமாடக்கூடிய இடமானது என்றால் சரிதான். அப்போது பொதுமக்களை யாரையும் சாட்சியாகவும் வழக்கு சம்பந்தமாகவும் விசாரிக்கவும் அழைத்து இருந்தால் வந்திருப்பார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கினைப் பொருட்கள் அணிந்தவர்கள் யாரும் சாட்சி மளிகை முன்வரவில்லை என்று சொல்லி உள்ளார்கள் அந்த தனி நபர் யார் யாரை அணுகினோம் என்று எந்த விவரமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். இந்த வழக்கில் நான் என்னுடன் பணியாற்றக்கூடிய சக காவலர்கள் மற்றும் உயர் அதிகாரியை தவிர வேறு சாட்சிகள் கிடையாது என்றாலும் சரிதான் இந்த வழக்கில் காவல் ஆய்வாளர் வரைபடம் பார்வை மகஜர் தயார் செய்தாரா என்றால் இல்லை. இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. அதனால் தான் சம்பவ இடத்தில் இருந்த யாரையும் பார்க்கவில்லை என்று அலட்சியமாக நீதிமன்றத்தில் சாட்சியத்தில் பதிலளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் புகார்தாரர் எனது உயர் அதிகாரி என்பதால் தான் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றார் சரி அல்ல. நான் வழக்கு பதிவு செய்யும்போது உடன் இருந்ததாகவும் அத்தாட்சியில் கைப்பற்றும் போது உடன் இருந்ததாகவும் சொல்லுவது உண்மை இல்லை என்றால் சரியல்ல காவல் நிலையத்தில் வைத்து காவல் ஆய்வாளர் நான் மற்றும் சக காவலர்களை வைத்து உருவாக்கப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல. அதனால் தான் இந்த வழக்கில் பட்டியல் சாட்சிகள் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறார்கள் என்றால் சரியல்ல, எனது சாட்சியம் முற்றிலும் பொய்யானது எதிரிக்கும் இந்த வழக்கில் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் சரி அல்ல. .

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.

S ILAIYARAJA
Digitally signed by S ILAIYARAJA
Date: 2026.06.02 14:06:46 +0530

Judicial Magistrate, Shenkottai

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**...**
**IN THE COURT OF Judicial Magistrate Court, Shencottai**
**CC No. 13/2018**

Deposition of the witness for Prosecution **PW2**
Name : **முத்து நாயகம்**
Father's/Husband's Name :
Age :
Village and Taluk :
Caste and Religion :
Calling :
Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on (02.06.2026)

Accused present

<u>முதல் விசாரணை</u>

நான் தமிழ்நாடு காவல் துறையில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து தற்போது ஓய்வு பெற்று இலஞ்சியில் வசித்து வருகிறேன். நான் குற்றாலம் கா வல் நிலையத்தில் 2017 ம் வருடம் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது 13.06.2017 ம்தேதி 16.00 மணிக்கு குற்றாலம் கா வல் நிலைய குற்ற பிரிவு ஆய்வாளருடன் நானும், மற்றும் சிறப்பு உதவி ஆய்வாளர்கள் சரசையன், ஜோசப், முதல் நிலை காவலர் கற்பக மூர்த்தி மற்றும் காவலர் பென்ஜாம் ஆகியோர்கள் மத்தளம்பாறை விலக்கு பக்கம் குற்றம் எதுவும் நடைபெறாமல் இருக்கக ரோந்து செய்து வரும் போது சம்பவ இடத்தில் TN 72 AB 2821 என்ற பதிவெண் கொண்ட இண்டியா கார் ரோட்டின் ஓரமாக நின்று கொண்டு உதவி ஆய்வாளரின் சீருடையில் நின்ற நபர் அந்த வழியாக வந்த வாகனங்களை வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தவர் போலிஸ் பார்ட்டியான எங்களை கண்டதும் அங்கிருந்து தப்பி ஓட முயற்சித்தார். அப்போது அவர் கால் தவறி கீழே விழுந்தார். அவரை பிடித்து விசாரித்த போது பின்னர் பெயர் விலாசம் கேட்டு தெரிந்து கந்த சாமி மகன் முத்துக்குமார் என்பவர் உதவி ஆய்வாளர் போல் சீருடை அணிந்து உதவி ஆய்வாளர் போல் பசாங்கு செய்து காவல் துறையையும், பொது மக்களையும் அச்சுறத்துல் செய்து ஏமாற்றி வந்ததாக அவர் கொடுத்த வாக்குமூலத்தின் பெயரில் மேற்படி நபரையும், அவ்ா உபயோகித்த இண்டியா காரையும் சம்பவ இடத்தில் வைத்து காவல் அதிகாரிகள் அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினார்கள். என்னிடம்

காட்டப்படும் அ,சா,ஆ.1ல் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையது தான். ஆஜர் எதிரி தான் அந்த முத்துக்குமார். அத்தாட்சியில் தனிநபர் யாரும் கையொப்பம் செய்ய முன்வரததால் நாங்கள் கையொப்பம் செய்தோம். பின்னர் எதிரியையும் வாகனத்தையும் கைப்பற்றி குற்றாலம் காவல் நிலையத்திற்கு அன்றையதினம் கொண்டு வந்து வழக்கு பதிவு செய்ய உதவியாக இருந்தேன். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் தற்போது நீதிமன்றத்தில் கூறியதை தான் காவல் ஆய்வாளர் என்னை விசாரிக்கும் போது கூறினேன் என்றால் சரிதான். நான் ரோந்து பணிக்கு காவல் வாகனத்தில் சென்றேனா இல்லை சொந்த வானத்தில் சென்றேன் என்றால் நான் எனது சொந்த வாகனத்தில் காவல் ஆய்வாளர் உடன் சென்றேன். பொதுவாக காவலர்கள் அன்று செய்யக்கூடிய பணிகளை பொது நாட் குறிப்பிட்டில் குறிப்பிடுவது வழக்கம் என்றால் சரிதான். இந்த வழக்கில் காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்யும் போது பொது நாட்குறிப்பேட்டை ஒப்படைத்தேன் என்றால் ஒப்படைத்தேன். அந்த பொது நாட்குறிப்பேட்டை காவல் ஆய்வாளர் இந்த வழக்குடன் மற்ற இறுதிஅறிக்கையில் தாக்கல் செய்து உள்ளார் அது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் முதல் தகவல் அறிக்கை ரோந்து பணிக்கு 16 மணிக்கு சென்றதாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான் 16..30 என்றால் சரிதான் 16.30 மணிக்கு ரோந்து பணிக்கு சென்றதாக அரசு தரப்பு சாட்சிகள் சொல்லி இருந்தால் அது பொய் என்றால் சரிதான். இந்த வழக்கில் புகார் தாரர் காவல் ஆய்வாளர் என்றால் சரிதான். நான் சிறப்பு உதவி ஆய்வாளர் என்பதால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யக்கூடிய அதிகாரம் உள்ளது என்றால் சரிதான்.இந்த வழக்கினை பொருத்தவரை முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது காவல் ஆய்வாளர் என்றால் சரிதான். இந்த வழக்கில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததும் இதே காவல் ஆய்வாளர் என்றால் சரிதான் . அதேபோல் இந்த வழக்கில் அத்தாட்சி மற்றும் எதிரியை கைது செய்தது இதே காவல் ஆய்வாளர் என்றால் சரிதான். இந்த வழக்கானது தனி புகாரியின் பேரில் பதிவு செய்யப்பட்டதா இல்லையா என்று புகாரின் தன்மை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படக்கூடிய 13. 6. 2017 ஆம் தேதி குற்றாலத்தில் சீசன் டைம்

என்றால் சரிதான். சீசன் டைம் என்பதால் காலை நேரங்களை விட மாலை நேரங்களில் கூட்டம் அதிகமாக இருக்கும் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லக்கூடிய இடமான மத்தாளம் பாறை விலக்கு பொதுமக்கள் அதிகமாக நடமாடிய கூடிய இடம் என்றால் சரிதான். அங்கு மாலை நேரங்களில் பதநீர் நுங்கு பழங்கள் விற்பனை அதிகமாக இருக்கும் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படக்கூடிய மாலை நேரம் 04.00 மணி சீசன் டைம் என்பதால் மக்கள் அதிகமாக நடமாடக்கூடிய இடம் என்றால் சரிதான். அத்தாட்சியில் தனிநபர் யாரும் சாட்சியாக கையொப்பம் இட வரவில்லை என்று சொல்லியதில் கையொப்பம் செய்வதற்கு நான் யாரையும் அழைத்தேன் என்றால் அழைத்தோம் அவர்கள் கையொப்பம் செய்ய முன்வரவில்லை. நாங்கள் யாரை அழைத்தோம் என்று அவர்களது பெயர் விவரங்கள் எதுவும் வழக்கிலும் விசாரணையிலும் துவங்கவில்லை என்றால் சரிதான். தனிநபர் கையொப்பம்செய்வதற்கு முன் வரவில்லை என்றால் அவர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க எங்களுக்கு அதிகாரம் உள்ளது என்றால் சரிதான். அப்படி எந்த ஒரு நடவடிக்கையும் அத்தாட்சியில் கையெழுத்து போட முன்வராத அவர்களுக்கு எதிராக நாங்கள் எடுக்கவில்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னபடியும் வழக்கில் சொன்னபடியும் எந்த ஒரு அத்தாட்சியை காரையோ கைப்பற்றப்படவில்லை . சம்பவ இடத்திற்கு நான் போகவில்லை என்றாலும் சரியல்ல. எதிரி வாகன தணிக்கை செய்ததாக சொல்லப்பட்டுள்ளது அது எந்த வாகனம் வாகன எண் எதுவும் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எதிரி தணிக்கை செய்யப்பட்டதாக சொல்லக்கூடிய வாகனங்களை நான் சந்தேகத்திற்கு இடமாக கைப்பற்றினோமா என்றால் இல்லை. எதிரி எந்த ஒரு வாகனத்தையும் தணிக்க செய்யவில்லை வழக்கிற்காக நாங்கள் பொய்யாக சொல்கிறோம் என்றால் சரியல்ல . எதிரி பொதுமக்களை மோசடி செய்ததாக எந்த ஒரு புகார் எங்கள் காவல் நிலையத்தில் தனிப்பட்ட முறையில் கொடுக்கவில்லை என்றால் சரிதான். எதிரி காவல் சீருடை பயன்படுத்தி பொதுமக்களை மோசடி செய்ததாக எந்த ஒரு புகாரும் எங்கள் காவல் நிலையத்தில் கொடுக்கவில்லை என்றால் சரிதான். எதிரி நான் சொல்வது போல் காவல் சீருடையும் அரசு முத்திரையும் பயன்படுத்தவில்லை அதனால் தான் எந்த ஒரு புகாரும் அவர் மீது கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் எங்கள் காவல் நிலைய ஊழியர்களை தவிர வேறு எந்த தனிப்பட்ட சாட்சிகளும் கிடையாது என்றால்

சரிதான். நான் சொன்ன நேரத்தில் நாளில் எந்த ரோந்து பணிக்கும் செல்லவில்லை என்றால் சரியல்ல. பொதுவாக குற்ற வழக்குகளில் பார்வை மகஜர் வரைபடம் தயார் செய்வது வழக்கம் அது எனக்கு தெரியும் என்றால் சரிதான். இந்த வழக்கில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் காவல் ஆய்வாளர் தயார் செய்தாரா என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாது .வழக்கில் புகார்தாரர் காவல் உயர் அதிகாரி என்பதால் அவருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கை பற்றி எனக்கு முழுமையாக தெரியாததால் தான் நீதிமன்றத்தில் எதிரியின் பெயரைக் கூட என்னால் சொல்ல முடியவில்லை என்றால் சரியல்ல. வழக்கு காவல் நிலையத்தில் வைத்து உருவாக்கப்பட்டதால் தான் காவலர்களை தவிர மற்றவர்களை சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரி போலீஸ் சீருடையுடன் வாகன போக்குவரத்தினை செய்தார் என்று எந்தவித ஆவணமும் எங்களிடம் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு பொய் வழக்கு என்றால் சரியல்ல.

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.

S ILAIYARAJA

Digitally signed by S ILAIYARAJA
Date: 2026.06.02 14:06:55 +0530

Judicial Magistrate, Shenkottai